# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093856

1. District : மாவட்டம் : வேலூர் | PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 03/19 | Date: நாள் 28-01-2019

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7 of Prevention of
   (iii) Act சட்டம்: and Criminal Procedure Code. | Sections பிரிவுகள்: Corruption (Amendment) Act 2018 r/w 202 Crpc.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 31-12-2018 at 17.30Hrs முடிய.
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01-01-2019 | Time : நேரம் 10.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I | Time : நேரம் 1000 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக : எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 6 kms வடக்கு)
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மாவட்ட பி.சி. நல அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் B-Block, 4th Floor, வேலூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. ஜோதி | (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் சம்பத்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 5.3.78 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் துணை ஆய்வுக் குழு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வேலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி.V.ராணி, மாவட்ட பி.சி. நல அலுவலர், வேலூர் மாவட்டம் மற்றும் 9 இதர அலுவலர்கள். (தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   புகாரினை பெற்று, ஊழல் தடுப்பு ([illegible]) [illegible] பொது ஊழியர்கள் மீது விசாரணை மேற்கொள்வது சம்பந்தமாக நெறிமுறை பெற்று. மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9: Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible signature] [illegible]/2019.

[illegible signature] 28/01/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28-01-2019 at 12.30 hrs.

Name: பெயர் P. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .........
[illegible]

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> கடந்த 01.01.2019-ம்தேதி காலை 10.00 மணிக்கு, வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P.விஜயலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு.S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 என்பவர், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி, கணினியில் டைப் செய்யப்பட்டு கொடுத்த புகாரினை பெற்று, ஊழல் தடுப்பு (திருத்தச்சட்டம் 2018)-ன்படி பொது ஊழியர்கள் மீது விசாரணை மேற்கொள்வது சம்மந்தமாக தெளிவுரை பெற்றும், துணை சட்ட ஆலோசகர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் அவர்களின் கருத்துரு பெற்றும், இன்று 28.01.2019-ஆம் தேதி பகல் 1200 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி புகாரின் விவரம் பின்வருமாறு: நாள்:01.01.2019 அனுப்புநர்: S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9, வேலூர் மாவட்டம். பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – மாவட்ட சமூக நல அலுவலகம், வேலூர் மாவட்டம் - திடீர் தணிக்கை – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – மனு. வேலூர் மாவட்டம், வேலூர் மாநகர், சத்துவாச்சாரியில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் B-Block 4th Floor-ல் மாவட்ட சமூக நல அலுவலகம் இயங்கி வருவதில் மாவட்ட சமூக நல அலுவலர், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விரிவாக்க அலுவலர்கள், ஊர் நல அலுவலர்கள் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் உள்ள இருபது ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் எட்டு கிராம் தங்கம் வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் ஊர் நல அலுவலர்கள் ஆகியோர்கள் மூலம் பயனாளிகளை மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு வரவழைத்து, பயனாளிகளுக்கு தங்கத்தை வழங்கும்போது அவரவர் தகுதிக்கேற்ப கையூட்டு பெறுவதாகவும், கையூட்டு பெறும் தொகையில் ஒரு பெரும் பகுதியை மாவட்ட சமூக நல அலுவலருக்கு வழங்க உள்ளதாக நம்பகமான தகவல் எனக்கு கிடைத்தது. ஆனால், அப்போது நான் திருவண்ணாமலையில் பணி நிமித்தமாக இருந்தமையால், மேற்சொன்ன தகவலை வேலூரில் இருந்த மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.S.ரகுராமன் என்பவருக்கு தெரிவித்தேன். அந்த தகவலை அவர் உறுதி செய்துகொண்டு, 31.12.2018-ம்தேதி மாலை சுமார் 1730 மணி முதல் 2300 மணி வரை, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் இணைந்து, மேற்படி வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் B-Block, 4th Floor-ல் உள்ள மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகத்தில் இருதுறை கூட்டு திடீர் சோதனை செய்யப்பட்டது. இச்சோதனை ஆரம்பிக்கும் முன்பு திரு.ரகுராமன் அவரையும் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களையும்,

இதர காவல் குழுவினரையும் அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களிடமும், மாவட்ட சமூக நல அலுவலரிடமும் அறிமுகப்படுத்திக்கொண்டும், அப்போது அவர்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லையென்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகத்தில் சுமார் இருபது நபர்கள் இருந்ததாகவும், பின்னர், மேற்படி மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.V.சாந்தி அவர்களிடம், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் கூட்டமாக இருப்பதற்கான காரணத்தை கேட்டதற்கு, அவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி திட்டம், முத்துலட்சுமி ரெட்டி கலப்பு திருமண நிதியுதவி திட்டம், விதவை மறுமண நிதியுதவி திட்டம், விதவை மகள் திருமண நிதியுதவி திட்டம் மற்றும் ஆதரவற்ற மகள் திருமண நிதியுதவி திட்டம் ஆகியவற்றின் கீழ் வேலூர் மாவட்டத்தில் உள்ள இருபது ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் எட்டு கிராம் தங்கம் வழங்குவதற்கு, சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் ஊர் நல அலுவலர்கள் ஆகியோர்கள் மூலமாக பயனாளிகளை, மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு வரவழைத்து அவர்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழான தங்கம் வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார். பின்னர் மேற்படி மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சாந்தி அவர்களை, திடீர் சோதனைக்குழுவினர் சோதனை செய்ய, அவரது கைப்பையில் பணம் ரூ.7,100/- இருந்ததாகவும், அது குறித்து, அவரால் தக்க முகாந்திரம் மற்றும் தன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது என்று கணக்கு கூற இயலாததால், அத்தொகையானது வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட சமூக நல அலுவலர் அறையில் உட்கார்ந்திருந்த திருமதி.V.கஸ்தூரி (57/18) க/பெ ராமமூர்த்தி, ஊர் நல அலுவலர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவர் தன்னுடைய ஆடையில் மறைத்து வைத்திருந்த பணத்தை எடுத்த பின் எண்ணிப் பார்க்க, ரூ.4,500/- இருந்துள்ளது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் கூறாத மற்றும் கணக்கு காண்பிக்க இயலாத அத்தொகை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டுள்ளது. பின்னர் திருமதி.K.குணவதி (54/18) க/பெ ரவி, ஊர் நல அலுவலர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவர் தன்னுடைய ஆடையில் மறைத்து வைத்திருந்த பணத்தை எடுத்த பின் எண்ணிப் பார்க்க, ரூ.7,000/- இருந்துள்ளது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, தாங்களாக பணம் யாரிடமும் கேட்கவில்லையென்றும், தாங்கள் அழைத்து வந்த 22 பயனாளிகளில், ஒரு சிலர் அவர்களாகவே விருப்பப்பட்டு பணத்தை கொடுத்ததாகவும் சொல்லியுள்ளார். அவரிடமிருந்து தக்க முகாந்திரம் கூறாத மற்றும் பயனாளிகளிடம் இருந்து லஞ்சமாக பெற்ற அத்தொகை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டுள்ளது. பின்னர் திருமதி.A.குமாரி (58/18) க/பெ ரமேஷ், விரிவாக்க அலுவலர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவர் தன்னுடைய ஆடையில் மறைத்து வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, ரூ.1,500/- இருந்துள்ளது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, தக்க முகாந்திரம் கூறாத மற்றும் கணக்கு காண்பிக்க இயலாத அத்தொகை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டுள்ளது. பின்னர்

மாவட்ட சமூக நல அலுவலரின் அறையை சோதனை செய்ததில் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அந்த சமயத்தில், நான் திருவண்ணாமலையில் பணி முடித்து, வேலூர் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தேன். பின்னர் என் முன்னிலையிலும், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ரகுராமன் முன்னிலையிலும் இரு துறை திடீர் சோதனை தொடர்ந்து செய்யப்பட்டது. பின்னர் மாவட்ட சமூக நல அலுவலர் அறைக்கு வெளியில் உள்ள ஹாலில் இருக்கையில் உட்கார்ந்திருந்த மாவட்ட சமூக நல அலுவலக கணக்காளர் திருமதி.D.சுகன்யா (39/18), க/பெ சிவசுப்பிரமணி என்பவர் வைத்திருந்த கைப்பையை சோதனை செய்ய, அதில் பணம் ரூ.2,000/- இருந்தது அது குறித்து அவரிடம் கேட்க, விமலா என்பவர் மகளிர் விடுதிக்கான சேர்க்கை விண்ணப்பத்தை தன்னிடம் கொடுத்ததாகவும், அதற்கான அனுமதி தொகையாக ரூ.2,010/-ஐ தன்னிடம் கொடுத்ததாகவும், அதனை தான் வாங்கி வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அது குறித்து விசாரித்த பின்னர், அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், திருமதி.சுகன்யா அவர்களின் இருக்கைக்கு இடது பக்கம் இருந்த ஆவணங்கள் அடுக்கி வைக்கும் இரும்பு ரேக்கினை சோதனை செய்ய, அங்கிருந்த ஆற்காடு ஊராட்சி மற்றும் அரக்கோணம் ஊராட்சி என்ற கோப்புகளுக்கு இடையே ஒரு சிறிய வெளிர் பிரௌன் நிற ஜிப் வைத்த மணி பர்ஸ் மறைத்து வைக்கப்பட்டிருந்தது அதனை எடுத்து சோதனை செய்ய பணம் ரூ.7,000/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க, அது தன்னுடைய மணி பர்ஸ் இல்லையென்றும், எப்படி அங்கு வந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறினார் மேலும், அங்கிருந்தவர்கள் எவரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை ஆகையால், யாரும் உரிமை கோராமல் கேட்பாரற்று கிடந்த அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் மாவட்ட சமூக நல அலுவலரின் அறையின் நுழைவாயில் கதவிற்கு வெளியே வலது பக்கம் கிழக்கு பார்த்து சாமி படங்கள் அருகில் இருந்த இரும்பு பெட்டிகளின் பின் பக்கம் சோதனை செய்ய, ஒழுங்கற்ற முறையில் கத்தையாக பணம் இருந்தது அதனை எடுத்து எண்ணிப் பார்க்க பணம் ரூ.8,600/- இருந்தது அது குறித்து அங்கிருந்த அனைவரிடமும் கேட்க, யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை ஆகையால் அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் இரும்பு பெட்டிக்கு அடுத்து தரையில் இருந்த பிளாஸ்டிக் கவரை எடுத்து சோதனை செய்ய, அதில் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் சம்மந்தப்பட்ட திருமண நிதியுதவி திட்ட பதிவேடுகள் இருந்தன அந்த பதிவேடுகளுக்கு இடையில் மற்றும் பிளாஸ்டிக் கவரில் கத்தையாக பணம் இருந்தது அதனை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.10,000/- இருந்தது அந்த பிளாஸ்டிக் கவர் குறித்து கேட்க, திருமதி.C.சந்திரா (58/18), க/பெ கணேசன், விரிவாக்க அலுவலர், வாலாஜா ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவர் மேற்படி பிளாஸ்டிக் பை தன்னுடையதுதான் என்றும், அதில் உள்ள ஆவணங்கள் தன்னுடைய அலுவலக ஆவணங்கள்தான் என்றும் ஆனால் அதில் உள்ள பணம் தன்னுடையது இல்லையென்றும் கூறி அமைதியாக இருந்தார். உரிமை கோராத, கேட்பாரற்று இருந்த அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அங்கிருந்த திருமதி.M.பரிமளா (58/18), க/பெ வாசு, விரிவாக்க அலுவலர், கணியம்பாடி ஊராட்சி

ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவர் வசம் ஆறு இநூறு ரூபாய் நோட்டுகள், மொத்தம் ரூ.3,000/- அவரது உடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அது குறித்து விளக்கம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்டாத அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த அறையில் இருந்த திருமதி.P.லஷ்மி (50/18), க/பெ சுந்தர்ராஜ், ஊர் நல அலுவலர், பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவரை திரேக சோதனை செய்ய, அவர் உடையில் மறைத்து வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க ரூ.2,500/- இருந்தது அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்டாத அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திரு.J. கீர்த்தி (36/2018), த/பெ ஜெயக்குமார் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் ஒழுங்கற்ற முறையில் அவரது சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டுகளில் இருந்து பணம் ரூ.8700/- இருந்தது குறித்து அவரிடம் கேட்க, அவரால் தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூற இயலாத அந்த தொகை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அங்கு இருந்த திருமதி.A.தங்கமணி, (36/18), க்/பெ மோகன் குமார், இளநிலை உதவியாளர், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-9 என்பவரை திரேக சோதனை செய்ய அவர் வசம் ரூ.700/- இருந்தது அது தன்னுடைய சொந்த பணம் என்றும், ஸ்வீட் வாங்குவதற்காக வைத்திருப்பதாகவும் சொன்னார். ஆதலால் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் உட்கார்ந்திருந்த இருக்கைக்கு இடது பக்கம் இருந்த இரும்பு ரேக்கிற்கு அடியில் சிதறியிருந்த பணத்தை சேகரித்து, எண்ணிப் பார்க்க அதில் பணம் ரூ.4,300/- இருந்தது அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அந்த பணத்திற்கும் தனக்கும் சம்மந்தம் இல்லையென்றும் தன் அருகில் நின்றிருந்த விரிவாக்க அலுவலர்கள் யாரேனும் கீழே போட்டிருக்கலாம் என்று தெரிவித்ததால் யாரும் உரிமை கோராத அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் கணக்காளர் திருமதி. சுகன்யா அவர்களின் இருக்கையினை அடுத்து சாமி படங்களுக்கு கீழே போடப்பட்டு இருந்த மேஜை மீது இருந்த அட்டை பெட்டியை சோதனை செய்ய, அதில் ரூ.1,900/- இருந்தது அது குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்க, யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை ஆதலால் அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திருமதி.P.கண்ணாமணி (53/18), க/பெ பழனி, ஊர் நல அலுவலர், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் என்பவரை திரேக சோதனை செய்ய அவர் வசம் ரூ.120/- இருந்தது. அது தன்னுடைய சொந்த பணம் என்றும், தனது போக்குவரத்து செலவிற்காக வைத்திருப்பதாகவும் சொன்னார் ஆதலால் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த சமயத்தில் அவர் தனக்கு அருகில் வைத்திருந்த கைப்பையில் இருந்து பணத்தை தன் கையில் எடுத்து, அவர் நின்றிருந்த இடத்திற்கு அருகில் இருந்த மர அலமாரியின் கீழே தூக்கி எறிந்தார். அந்த பணத்தை சேகரித்து, எண்ணிப் பார்க்க அதில் பணம் ரூ.10,400/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க தக்க முகாந்திரம் கூறாமல், கணக்கு கூற இயலாத மற்றும் மறைக்க முயன்ற

அந்த பணம் 'வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையில், மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த 13 ஊழியர்களிடமிருந்து பணம் கண்டெடுக்கப்பட்டு, அந்த பணத்திற்கு அவர்கள் தக்க காரணமும், முகாந்திரமும் சொன்னதால், அந்த தொகை அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், சில ஊழியர்களிடம் பணம் ஏதும் இல்லாமலும் இருந்தது. மேலும், வேலூர் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சாந்தி அவர்களிடம், மேற்படி நிதியுதவி திட்டங்களுடன் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் பற்றி கேட்க, அவர் 52 ஆவணங்களை எடுத்து ஆஜர்படுத்தினார். அந்த ஆவணங்களில் பதிவு செய்யப்பட்ட இறுதி பக்கங்களில் நானும், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சாந்தி மற்றும் காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ரகுராமன் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த ஆவணங்களை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இந்த வழக்கின் நிமித்தம் வேலூர் மாவட்ட சமூக நல அலுவலர் மற்றும் அவரது அலுவலகம் சார்ந்த அலுவலர்களிடமிருந்து, அவர்களால் சரியான முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.76,500/- மற்றும் வழக்கின் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனை சம்மந்தமாக விரிவான செயல்முறை ஒன்று, 31.12.2018-ம்தேதியன்று 1730 மணி முதல் 2300 மணி வரை தயார் செய்யப்பட்டது. எனவே, மாவட்ட சமூக நல அலுவலக பணிகளை செய்வதற்கு முறைகேடாக பயனாளிகளிடமிருந்து பணம் வசூல் செய்த 1) திருமதி.V.சாந்தி (56/2018) த/பெ வீராசாமி, மாவட்ட சமூக நல அலுவலர், வேலூர் மாவட்டம், வேலூர் 2) திருமதி.V.கஸ்தூரி (57/18) க/பெ ராமமூர்த்தி, ஊர் நல அலுவலர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், 3) திருமதி.K.குணவதி (54/18) க/பெ ரவி, ஊர் நல அலுவலர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், 4) திருமதி.A.குமாரி (58/18) க/பெ ரமேஷ், விரிவாக்க அலுவலர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், 5) திருமதி.D.சுகன்யா (39/18), க/பெ சிவசுப்பிரமணி, கணக்காளர், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-9, 6) திருமதி C.சந்திரா (58/18), க/பெ கணேசன், விரிவாக்க அலுவலர், வாலாஜா ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், 7) திருமதி.M.பரிமளா (58/18), க/பெ வாசு, விரிவாக்க அலுவலர், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், 8) திருமதி.P.லஷ்மி (50/18), க/பெ சுந்தர்ராஜ், ஊர் நல அலுவலர், பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், 9) திரு.J. கீர்த்தி (36/2018), த/பெ ஜெயக்குமார், கண்காணிப்பாளர், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-9 மற்றும் 10) திருமதி.P.கண்ணாமணி (53/18), க/பெ பழனி, ஊர் நல அலுவலர், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த திடீர் இருதுறை கூட்டுச்சோதனைக்கு முன்பும், பின்பும் மேற்படி அலுவலகத்திலிருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தவில்லை. மேலும், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சாந்தி மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும்

ஏற்படுத்தப்படவில்லை. என்னுடைய இந்த புகாருடன் மேற்படி இருதுறை கூட்டு சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இந்த செயல்முறையில் இரு துறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமாக அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும், இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.76,500/-ஐ நான் எங்கள் அலுவலக பணப்பதிவேட்டில் பதிவு செய்தும், அதனை வேலூர் கருவூலத்தில் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து, நீதிமன்றத்திற்கு வழக்கு சொத்தாக அனுப்பும்போது எடுத்து கொடுக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். Sd/-xxxxxxxx 01/01/2019 (எஸ். ஜோதி) துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் & தி.மலை.

அய்யா,

மேற்படி புகார்மனுவினை பெற்று, பிரிவு 17-A ஊழல் தடுப்பு (திருத்தச்சட்டம் 2018)-ன்படி பொது ஊழியர்கள் மீது விசாரணை மேற்கொள்வது சம்மந்தமாக தெளிவுரை பெற்றும், துணை சட்ட ஆலோசகர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் அவர்களின் கருத்துரு பெற்று, இன்று 28.01.2019-ஆம் தேதி பகல் 1200 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2019 ச/பி 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 102 Cr.PC-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 28/1/19

ii. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மற்றும் இரு துறை திடீர் கூட்டு சோதனையின் செயல்முறை ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது. 28/1/19

28/01/19

(P. VIJAYALAKSHMI)
INSPECTOR OF POLICE
V&AC, VELLORE.